# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர் 613 010

முனைவர் க.சங்கர்
பதிவாளர்(பொ)

நாள் : 03.01.2022

ந.க.எண். 71/ 20-21 / தோ.பி. / நாள். 03.01.2022

**பொது ஏல (ம) மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளி**

-----------

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான தஞ்சாவூரிலுள்ள கீழ்க்காணும் மரங்களின் மேல் பலன்களை மட்டும் ஏலம் உறுதியாக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30.11.2022 முடியவுள்ளக் காலத்திற்கு அனுபவித்துக் கொள்வதற்கான உரிமை பொது ஏலத்தில் விடப்படும்.

இந்த ஏலம் 20.01.2022 அன்று மாலை 03.00 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழக பேரவைக் கூடத்தில் (நிருவாகக் கட்டடம் மேல வஸ்தாச்சாவடி, தஞ்சாவூர் ) நடைபெறும்.

| வ. எண். | மரங்களின் விவரம் | மு.தி.வெ.சி.சா. பகுதி | நிருவாகக் கட்டடம் | குடியிருப்பு வளாகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | புளிய மரம் | 218 (மரத்திற்கு 20 கிலோ) | 54 (மரத்திற்கு 30கிலோ) | 117 (மரத்திற்கு சுமார் 50 கிலோ) | 389 |
| 2. | இலவ மரம் | 12 | - | - | 12 |
| 3. | முருங்கை மரம் | 2 | - | - | 2 |
| 4. | மாமரம் | 7 | - | - | 7 |
| 5. | சப்போட்டா மரம் | - | - | 8 | 8 |
| 6. | நெல்லி மரம் | - | 21 | 4010 | 4031 |
| 7. | நாவல் மரம் | - | - | 1063 | 1063 |
| 8. | வேம்பு | 955 | - | 402 | 1357 |
| 9. | பலா மரம் | 1 | 4 | 5 | 10 |
| 10. | முந்திரி | 1 | 89 | 41 | 131 |
| 11. | பனைமரம் காய்ப்பு (நொங்கு மட்டும்) | 118 | 74 | 113 | 305 |

மேற்கண்ட மூன்று இனங்களுக்கும் சேர்த்து ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பணம் செலுத்தி ஏலம் கேட்க வேண்டும்.

ஏலதாரரிடம் முழு முகவரியுடன் ஏலம் எடுக்க விருப்புத் தொகையை எண்ணாலும், எழுத்தாலும் திருத்தங்கள் இன்றிக் கையொப்பமிட்ட வகையில் **“பதிவாளர்,தமிழ்ப் பல்கலைக்கழகம்”** என்ற முகவரிக்கு உறையின் மேல் **“பலன்தரும் மரங்களின் பலன்கள்”** தொடர்பான விலைப்புள்ளி என குறியிட்டு 20.01.2022 பிற்பகல் 01.00 மணிக்குள் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

ஏலத்தின் நிபந்தனைகள்

1. ஏலம் எடுக்க விருப்பமுள்ள ஒவ்வொருவரும் குத்தகை உரிமத்திற்கு முன் வைப்புத் தொகை அளித்தப் பின்னரே ஏலத்தில் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள். ஏலத்தில் அதிகத் தொகை கேட்பவர்களுக்கே ஏலம் உறுதி செய்யப்படும். அவ்வாறு ஏலம் எடுத்தவர் ஏலம் எடுத்த இடத்திலேயே 50% சதவீதம் தொகையை உடன் செலுத்த வேண்டும். மீதத் தொகை முழுவதும் ஏலம் உறுதியாக்கம் செய்ததை ஏலதாரர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்த நாளிலிருந்து (15) பதினைந்து தினங்களுக்குள் மீதத் தொகையைச் செலுத்தி உரிய முத்திரை தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் ஏலம் எடுத்தவருடைய தொகை திரும்பத் தரப்படமாட்டாது. பின்னர் மறு ஏலம் விடப்படும்.

2. ஏலம் எடுக்காதவருடைய வைப்புத் தொகையை ஏலம் முடிந்தவுடன் அந்த இடத்திலேயே திருப்பி அளிக்கப்படும்.

3. ஏலதாரரே மரத்திற்கு இரவு, பகல் இரு நேரங்களிலும் உரிய காவலர்களை அமர்த்தி மரத்தின் பலன்களை எவரும் எடுக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும், நிருவாகம் இதற்கு பொறுப்பேற்காது. காவலர்களைக் கொண்டு 24 மணி நேரமும் கண்காணிக்க அனுமதி உண்டு.

4. ஏலம் எடுத்தவர் பலன் தரும் மரங்களின் மகசூலை மட்டும் அனுபவிக்க வேண்டும். மரங்களுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்கக் கூடாது. மரங்களின் கிளை போன்றவற்றையும் வெட்டக்கூடாது.

5. பனை மரத்தில் கல் இறக்கக் கூடாது. மட்டைகளை வெட்டக் கூடாது.

6. மரங்கள் பட்டுப்போனதாலோ, எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப்பெறவில்லை என்ற காரணங்களினாலோ, எண்ணிக்கை வேறுபாடு இருப்பதாலோ, தனக்கு இழப்பு ஏற்பட்டதென்று உரிமைத் தொகையில் எவ்விதத் தள்ளுபடியும் கேட்க ஏலம் எடுத்தவருக்கு உரிமை கிடையாது.

7. உரியக் காலத்திற்கு மரங்கள் இருக்கும் இடம் பல்கலைக்கழக உபயோகத்திற்கோ மற்ற காரணங்களுக்கோ தேவைப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி மரங்கள் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ள பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

8. வேப்பங்கொட்டையை எடுத்துக் கொள்ள ஏலதாரருக்கு உரிமை உண்டு.

9. ஏலத்தின் முடிவு பதிவாளருக்கு உறுதியாக்கப்பட்டது.

**தொடர்புக் கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் : 04362 226720, 9944001363**

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இனிவரும் காலங்களில் பதிவாளர் அவர்களால் வகுக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலதாரர் கலந்துக் கொள்ள வேண்டும்.

31/1/22

பதிவாளர் (பொ)

பெறுநர்

ஏலதாரர்கள் பட்டியல் படி

நகல்

1. துணைவேந்தரவர்கள் செயலகம்
2. மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
3. பதிவாளர் செயலகம்
4. நிதிப்பிரிவு
5. தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளம்
6. மக்கள் தொடர்புப் பிரிவு
7. வனத்துறை
8. தலைமைக் காவலர்